## ஏழைகளிற்காதரவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூதாய விரிவாக்கல் (பீஈஏசீஈ) செயற்திட்டம் - 2013 மே 31 இல் முடிவடைந்த ஐந்து மாத காலம்

ஏழைகளிற்காதரவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூதாய விரிவாக்கல் (பீஈஏசீஈ) செயற்திட்டத்தின் 2013 மே 31 இல் முடிவடைந்த ஐந்து மாத காலத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைபிற்கான முகவராக (ஜெஐசீஏ) அறியப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் (ஜேபீஐசீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2003 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல்பீ 77 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4.7 ஆம் பிரிவு மற்றும் 2011 மே 20 ஆம் திகதிய கடன் உடன்படிக்கைக்கான திருத்தம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல்யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

ஏழைகளிற்காதரவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூதாய விரிவாக்கல் (பிஈஏசீஈ) செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக இருப்பதுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பிற்காக உதவியளித்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மதிப்பட்பட்ட மொத்தக்கிரயம் ரூபா 2,661 மில்லியனிற்கு சமமான ஐ.யென் 2,003 மில்லியன் ஆனதுடன் அதில் ஐ.யென் 1,633 மில்லியன் ஜேஐசீஏ ஆல் நிதியளிக்க உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் தனது நடவடிகக்கைகளை 2003 மார்ச் 26 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2010 மார்ச் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக தாமதப்பட்டிருந்ததுடன் இறுதியாக இச்செயற்திட்டம் 2005 மே 01 இல் இடை நிறுத்தப்பட்டு 2006 இல் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் பூர்த்தியாக்கல் காலம் 2013 மே 22 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கற் திகதியிலிருந்து 03 மாதங்கள் சலுகைக்காலம் செயற்திட்டத்தை இறுதியாக்குவதற்காக வழங்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல்

முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்தநிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலிவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப முற்பணம், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2012 மே 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 மே 31 இல் முடிவடைந்த ஐந்து மாத காலத்திற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 மே 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2013 மே 31 இல் முடிவடைந்த ஐந்து மாத காலத்திற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 மே 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,
நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிசார் கூற்றுக்கள்

### 4.1. நிதிசார் செயலாற்றல்

தரப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின்படி, மீளாய்வு காலத்திற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 43,094,741 தொகையாக இருந்ததுடன் 2013 மே

31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா. 2,548,256,695 ஆக இருந்தது. மீளாய்வு காலத்திற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 மே 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு பின்வரும் கூற்றில் காட்டப்படுகின்றது.

| **செலவின வகை** | **2013 மே 31 இல் முடிவடைந்த ஐந்து மாதகாலப் பகுதிக்கான செலவினம்** | **2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம்** | **2013 மே 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| சிவில் வேலைகள் | 18,178,608 | 219,539,496 | 1,704,277,681 |
| வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் | 9,500 | 102,513 | 139,748,860 |
| ஆலோசனைச் சேவைகள் | இல்லை | 80,319,037 | 361,467,646 |
| சமூகத்தைத் தயார்ப்படுத்தல் | இல்லை | இல்லை | 9,470,530 |
| பயிற்சி | இல்லை | இல்லை | 4,306,573 |
| வாழ்வாதார உதவி | இல்லை | 926,121 | 43,810,184 |
| முற்பணங்களின் தீர்ப்பனவு | இல்லை | (15,258,351) | இல்லை |
| செயற்திட்ட முகாமைத்துவக் கிரயம் | 5,390,703 | 25,563,801 | 149,234,799 |
| வட்டி மற்றும் சேவைக் கட்டணங்கள் | 19,515,930 | 47,025,500 | 135,940,422 |
| | 43,094,741 | 358,218,117 | 2,548,256,695 |

## 4.2. கட்டுநிதி நிதியக் கணக்கு

செயற்திட்டத்தால் பேணப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடுகளின் படி, செயற்திட்ட நோக்கங்களிற்காக பேணப்பட்ட கட்டுநிதி நிதியக் கணக்கின் மீளாய்விற்குட்பட்ட ஐந்து மாதங்களிற்கான தொழிற்பாடுகள் கீழே பொழிப்பாகத் தரப்படுகின்றது.

| | **ஜப்பான ஜென்** | **ரூபா** |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 9,046,113 | 13,387,343 |
| கூட்டு: - மீள்நிரப்புகைகள் | 3,393,264 | 4,761,198 |

| | | |
|---|---|---|
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் /(நட்டம்) | - | (825,037) |
| | 12,439,377 | 17,323,504 |
| கழி: - பற்றுதல்கள் | (12,439,377) | (17,323,504) |
| 2013 மே 31 இல் உள்ளவாறான மீதி | இல்லை | இல்லை |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் நாணய பரிமாற்ற வித்தியாசமாக ரூபா 20,054 தொகை காட்டப்பட்டிருந்தது. எனினும் நாணய பரிமாற்ற வித்தியாசத்திற்கான விபரங்கள் கணக்காய்விற்குத் தரப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்.

### 6.1 நிதிகளின் பயன்பாடு

நிதிக் கூற்றுக்கள் மற்றும் தரப்பட்ட தகவல்களின்படி, 2013 மே 31 இல் முடிவடைந்த ஐந்து மாத காலத்திற்கான போது மொத்த நிதி ஏற்பாடு, உண்மையான செலவினம் மற்றும் நிதிகளின் பயன்பாட்டின் சதவீதம் என்பன கீழே தரப்பட்டுகின்றன.

| | மதிப்பிடப் பட்ட நிதி ஏற்பாடு | உண்மையான செலவினம் | பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| திரட்டு நிதி | 20,000,000 | 9,868,043 | 49.34 |
| மீளளிக்கவேண்டிய வெளிநாட்டு உதவி -கடன் | 75,000,000 | 36,839,436 | 49.12 |
| | 95,000,000 | 46,707,479* | 49.16 |

* ரூபா 3,612,738 கூட்டுமொத்த தொகையான முன்னைய ஆண்டிற்கான பிடிகாசு சேர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இத் தொகை வேறுபடுகின்றது.

### 6.2. செயலாற்றல் மீளாய்வு

2013 மே 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் புனரமைப்பு வேலைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் கீழே தரப்பட்டுகின்றன.

## (அ) நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பு மீதான நிதிசார் முன்னேற்றம்

| குளத்தின் பெயர் | மாவட்டம் | மொத்த ஒதுக்கீடு | ஒப்பந்த தொகை | 2013 மே 31 வரையான உண்மையான செலவினம் | ஒப்பந்த தொகையின் சதவீதமாக செலவினம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | % |
| **வட மாகாணம்** | | | | | |
| மாமடுவ | வவுனியா | 50.00 | 49.02 | 48.88 | 99.71 |
| நாம்பன் குளம் | வவுனியா | 29.00 | 28.98 | 28.55 | 98.52 |
| தட்சணாமருதமடு | மன்னார் | 51.00 | 50.90 | 50.89 | 99.98 |
| அக்கராயன் குளம் | கிளிநொச்சி | 400.00 | 401.00 | 399.10 | 99.52 |
| தென்னியன் | முல்லைத்தீவு | 93.50 | 94.00 | 93.56 | 99.53 |
| அகத்திமுறிப்புக்குளம் | மன்னார் | 162.00 | 320.35 | 161.90 | 50.54* |
| **கிழக்கு மாகாணம்** | | | | | |
| பொரபொல | அம்பாறை | 42.00 | 41.63 | 41.30 | 99.21 |
| மொறவேவ | திருகோணமலை | 267.80 | 267.56 | 267.49 | 99.97 |
| குரங்குபாஞ்சான் | திருகோணமலை | 50.00 | 49.61 | 49.58 | 99.94 |
| புலுக்குணாவை | மட்டக்களப்பு | 394.92 | 395.76 | 396.28 | 100.13 |
| **மொத்தம்** | | 1,540.22 | 1,698.81 | 1,537.53 | 90.51 |

* 2011 மார்ச் மாதத்தில் அகத்திமுறிப்புக் குளம் திட்டத்தின் அநுராதபுரம் மற்றும் குருநாகல் கூறு மத்திய நீர்ப்பாசன திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## (ஆ) 2013 மே 31 இல் உள்ளவாறான நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பில் பௌதீக முன்னேற்றம்.

| குளத்தின் பெயர் | நீர்த்தேக்கப் பகுதி (கெக்) | நலனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை | ஒப்பந்த பொதிகளின் எண்ணிக்கை<br>இலக்குகள் எண்ணிக்கை | பூர்த்தியாக்கப் பட்டவை | பகுதியளவு பூர்த்தியாக்கப் பட்டவை மற்றும் இடைநிறுத்தப் பட்டவை |
|---|---|---|---|---|---|
| **வட மாகாணம்** | | | | | |
| மாமடுவ | 267 | 285 | 10 | 6 | 4 |
| நாம்பன் குளம் | 104 | 49 | 10 | 8 | 2 |
| தட்சணாமருதமடு | 215 | 175 | 8 | 8 | - |
| அக்கராயன் குளம் | 1,358 | 1,139 | 84 | 68 | 16 |
| தென்னியன் | 344 | 340 | 18 | 18 | - |
| **கிழக்கு மாகாணம்** | | | | | |
| பொரபொல | 200 | 625 | 10 | 8 | 2 |
| மொறவேவ | 1,636 | 1,600 | 64 | 50 | 14 |
| குரங்குபாஞ்சான் | 202 | 254 | 13 | 9 | 4 |
| புலுக்குணாவை | 1,755 | 750 | 63 | 50 | 13 |
| **மொத்தம்** | 6,081 | 5,217 | 280 | 225 | 55 |

செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, ஏழரை ஆண்டுகளின் பின்னர் நீர்ப்பாசனத் திட்டங்களின் புனரமைப்பிற்காக ரூபா 1,538 மில்லியன் அல்லது மொத்த ஒதுக்கீட்டில் 90.51 சதவீதம் மாத்திரம் செயற்திட்டதால் பயன்படுத்தப்பட்டிருந்தது. எனினும், 2013 மே 31 இல் உள்ளவாறு 280 ஒப்பந்தப் பொதிகள் என்ற இலக்கில், 225 பொதிகள் அல்லது 80.35 சதவீதம் மாத்திரம்முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.